**செய்தி வெளியீடு எண்: 927** **நாள்: 17.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (17.12.2018) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருநெல்வேலி மாநகராட்சி சந்திப்பு பகுதியில் 78 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பெரியார் பேருந்து நிலையத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், தேனி, சிவகங்கை, வேலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் 9 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 22 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 35 திட்டப் பணிகளையும் திறந்து வைத்தார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிர்வாகம் சார்பில் திருநெல்வேலி மாநகராட்சி சந்திப்பு பகுதியில் உள்ள பெரியார் பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு, 3,31,407 சதுர அடி பரப்பளவில், தரைகீழ் தளம், தரை மற்றும் மூன்று தளங்களுடன் 78 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பெரியார் பேருந்து நிலையத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். புதிதாக கட்டப்படவுள்ள பேருந்து நிலையத்தின் தரைகீழ் தளத்தில் 1629 இருசக்கர வாகனங்களும், 106 நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்துவதற்கான இடவசதியும், தரைதளத்தில் 27 பேருந்து பாந்துகளும் மற்றும் 30 கடைகளும், முதல் தளத்தில் 82 கடைகளும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் தலா 16 கடைகளும் அமைக்கப்படவுள்ளன. மேலும், இப்பேருந்து நிலையம், மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

மேலும், தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம்; சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி இருசக்கர வாகன நிறுத்துமிடம்; வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சியில் அமின் பிரான் தர்கா தெரு மற்றும் கோட்டை மேட்டு தெரு ஆகிய இரண்டு இடங்களில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டடங்கள்;

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பேரூராட்சியில் காமராஜர் சாலையில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடம்; தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் பாப்பம்மாள்புரத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம்;

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் மூலதன நிதியின் கீழ், கட்டட இடிபாடுகளை உடனுக்குடன் தொய்வின்றி அகற்றும் பணிக்காக 3 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 15 ஸ்கிட் ஸ்டீர் லோடர் (Skid Steer Loader) வாகனங்கள் மற்றும் காசநோய் இல்லா சென்னை திட்ட நிதியின் கீழ் 4 கோடியே 55 லட்சம் மதிப்பீட்டிலான காசநோய் இல்லா சென்னையை உருவாக்க நோய் கண்டறியும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட 7 நடமாடும் வாகனங்கள் ஆகியவற்றை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் 7 பணியாளர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் பாபா அணுமின் நிலையத்தின் நிசர்குருணா என்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் திரு.வி.க.நகர் மண்டலம், புளியந்தோப்பு பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி இறைச்சிக்கூடத்தில், 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இறைச்சிக்கூட கழிவுகளை கொண்டு எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் தலா 5 மெட்ரிக் டன் திறனுடைய 2 கலன்கள்;

அம்ருத் திட்டத்தின் கீழ், மணலி மண்டலம், மணலி நியூ டவுன், சி.பி.எஸ்.–6 பகுதியில் 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; மணலி நியூ டவுன், சி.பி.எஸ்.–2 பகுதியில் 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தண்டையார்பேட்டை மண்டலம், எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; அம்பத்தூர் மண்டலம், அம்பத்தூர்

தொழிற்பேட்டை, 2வது குறுக்கு தெருவில் 1 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; அம்பத்தூர் மண்டலம், சர்ச் சாலை மற்றும் வளசரவாக்கம் மண்டலம், நொளம்பூர், எம்.சி.கே.லேஅவுட் சாலையில் 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கோடம்பாக்கம் மண்டலம், அருணாச்சலம் சாலையில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; அடையாறு மண்டலம், ஏ.ஜி.எஸ். காலனியில் 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; சோழிங்கநல்லூர் மண்டலம், சக்தி கார்டன், 4வது குறுக்கு தெருவில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 6 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 9 பூங்காக்கள்;

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தேனாம்பேட்டை மண்டலம், சாந்தோம் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி வளாகத்தில் உள்ள விளையாட்டுத் திடலில், உணர்வு குறைபாடு உள்ள குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையிலும், நடக்க முடியாத மாற்றுத்திறனாளிகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதத்திலும், தொட்டுப்பார்த்து நேரில் பார்க்கும் உணர்வை உருவாக்கிடவும், வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சி அளிக்கும் வகையிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு ஏதுவான விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு தளத்துடன், மாற்றுத்திறனாளி குழந்தைகள் எளிதில் அறியும் வகையில் தகவல் பலகை போன்ற வசதிகளுடன், 1,529 சதுர மீட்டர் பரப்பளவில் 1 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள உணர்வு பூங்கா;

அம்பத்தூர் மண்டலம், கொரட்டூர் ஏரி உபரிநீர் கால்வாயின் குறுக்கே கால்வாய் சாலையில், மதனாங்குப்பம் பிரதான சாலையிலும், தேனாம்பேட்டை மண்டலம், மாம்பலம் கால்வாயின் குறுக்கேயும் 4 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 பெட்டக வடிவ பாலங்கள்;

என மொத்தம் 31 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**